# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 120/மா/2019

ஆணை நாள்: 03.01.2020

திரு. ஜே. ஜான் ஜோசப் செல்லகுமார்,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

1) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி.

2) உதவி வருவாய் அலுவலர்,
திண்டுக்கல் மாநகராட்சி – எதிர்மனுதாரர்கள்

மதுரை ராமச்சந்திரா நகர், ராஜா தெரு, எண். 05, என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜே. ஜான் ஜோசப் செல்லகுமார் என்பவரது 15.07.2019 நாளிட்ட மனு 26.07.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 120/மா/2019 என எண்ணிடப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது 15.07.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது விட்டுற்கான குடிநீர் இணைப்பு வரிவிதிப்பு விபரங்களை இணையதள பதிவிலிருந்து மாநகராட்சி உதவி வருவாய் அலுவலரால் நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றும், குடிநீர் இணைப்புக்கான விரிவிதிப்பு

தொகையினை செலுத்த தயாராக இருந்தும் மாநகராட்சி அலுவலர்கள் பெற மறுப்பதாகவும், சம்மந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தார்.

முறையீட்டு ,மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவத்தின் 02.08.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. அதன்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் 16.8.2019 நாளிட்ட அறிக்கையில், முறையீட்டு மனுதாரரின் பழைய குடிநீர் வரிவிதிப்பு எண். 078/79077 (புதிய குடிநீர் வரிவிதிப்பு எண். 078/030/00530) ன் நிலுவைத் தொகை ரூ. 8604/- மற்றும் பழைய குடிநீர் வரிவிதிப்பு எண். 078/24239 (புதிய குடிநீர் வரிவிதிப்பு எண். 078/030/00347) ன் நிலுவைத் தொகை ரூ.4584/- தற்பொழுதுவரை நிலுவை மற்றும் நடப்பு தொகை நிலுவையாக உள்ளது என்றும், மனுதாரர் குடிநீர் கட்டணம் குடிநீர் வரிவிதிப்பு எண். 078/030/00530 ற்கு 2008-2009 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகவும், குடிநீர் வரிவிதிப்பு எண். 078/030/00347 -ற்கு 2016-2017 முதல் நிலுவையாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 16.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்க முறைமன்ற நடுவத்தின் 24.10.2019 நாளிட்ட அழைப்பாணையில் ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இம்முறைமன்ற நடுவத்தின் 24.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 16.12.2019 அன்று திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில், முறையீட்டு மனுாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு, குடீநீர் கட்டணம் தற்போது வசூலிக்கப்பட்டது என்றும் குடிநீர் இணைப்பும் வழங்கப்பட்டுவிட்டது என்றும், உதவி வருவாய் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட மாநகராட்சி பணியாளர்கள் விதிகளின்படி செயல்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

இந்நேர்வில் மனுதாரரின் கோரிக்கை, விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதால், இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப்பதிவாளர்

பெறுநர்

1. திரு. ஜே. ஜான் ஜோசப் செல்லகுமார்,
   5, ராஜா தெரு, ராமச்சந்திரா நகர்,
   மதுரை – 625 016.

2. ஆணையர்,
   திண்டுக்கல் மாநகராட்சி,
   திண்டுக்கல்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி